அரசு வலியுறுத்திக் கொண்டிருக்கிறது. அதேபோல் மேற்கு நோக்கி பாயும் நதிகளை கிழக்கு நோக்கி ஓடும்படி மாற்றினால் பல்வேறு பகுதிகளை தமிழ்நாட்டில் பாசன வசதிக்கு கொண்டுவர முடியும் என்ற எண்ணத்தோடு தமிழக முதல்வர் கூட நடவடிக்கை எடுத்து அதற்காக ஒரு குழு அமைக்கப்பட்டு அந்தக் குழு இன்றைக்கு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது. அதை நடைமுறைப்படுத்தினால் தமிழ்நாட்டில் பாசன வசதியற்றிருக்கக் கூடிய பலவேறு பகுதிகள் எல்லாம் பாசனவசதி பெறுகிற நிலை ஏற்படும்.

திருப்பத்தூர் கூட்டுறவு சர்க்கரை ஆலைப் பகுதியில் சாலைப் பணிகள்

*வினா எண். 138—திரு. தி. அன்பழகன் : மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பத்தூர் கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு கரும்பு ஏற்றிச்செல்ல வசதியாக சர்க்கரை ஆலையினரால் பரிர் துரைத்த ரோடுகளின் விபரம் என்ன ?

(ஆ) இதில் எத்தனை ரோடுகளில் பணி முடிந்திருக்கிறது?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) மற்றும் (ஆ) சட்டப்பேரவையின் முன் ஓர் அறிக்கை ** வைக்கப்பட்டுள்ளது.

[முற்பகல் 9-50]

திரு. தி. அன்பழகன் : தலைவர் அவர்களே, இங்கே வைக்கப்பட்டிருக்கின்ற விவர அறிக்கையில், ஆறாவதாக குறிக்கப்பட்டிருக்கின்ற தரைப்பாலத்தை சர்க்கரை ஆலைகள் இயக்குநர் பரிந்துரை செய்திருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அந்தப் பகுதி ஏறத்தாழ 10 ஊராட்சி ஒன்றியங்களை இணைக்கின்ற காரணத்தால், இந்தத் தரைப்பாலம் அமைக்கப்பட்டால் பல்லாயிரக்கணக்கான டன்கள் கரும்பு புதியதாக இந்த ஆலையில் பதிவு செய்யப்பட இருக்கின்ற காரணத்தினால், உடனடியாக இந்த தரைப் பாலத்தைப் போடுவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லக்கூடிய இந்த அம்பலூர்-ஏக்லாஸ்புரம் தரைப் பாலம் கட்டுவதற்கான திட்டம் அரசின் ஆயிவில் இருந்து வருகிறது. உடனடியாக அது செயல்படுத்தப் படும்.

** 610-ம் பக்கத்தில் இணைப்பு II ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

1980 பிப்ரவரி 13]

திரு. சி. கோவிந்தராசன் : பேரவைத் தலைவர் அவர்களே, சர்க்கரை ஆலைகள் பகுதியில் சாலைகள் அமைப்பது கரும்பு செஸ் நிதியிலிருந்து என்று தெரிகிறது. இந்த குறிப்பிட்ட சர்க்கரை ஆலைக்கு எவ்வளவு பணம் கரும்பு செஸ் நிதியிலிருந்து பயன் படுத்தப்பட்டது? அதே போல், இதர சர்க்கரை ஆலைகள பகுதிகளில் இப்படிப்பட்ட சாலைகள் போடுவதற்கு இந்த கரும்பு செஸ் நிதியைப் பயன்படுத்துவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, கரும்பு மேல்வரியாக டன் ஒன்றுக்கு ரூ. 5 ஒவ்வொரு ஆலையிலிருந்தும் அரசு வசூல் செய்கிறது. அந்தத் தொகையிலிருந்து சாலை அபிவிருத்தித் திட்டம், ஆராய்ச்சி, மற்றும் அபிவிருத்தித் திட்டங்கள், புதிய சர்க்கரை ஆலைகளுக்குப் பங்கு தொகைகள் இவைகள் எல்லாம் போடப்பட்டு வருகிறது. இதன் மூலம் கடந்த 1973–74 லிருந்து பல்வேறு சாலைகள் நாம் போட்டிருக்கிறோம். கடந்த 1978–79லேகூட ரூ 66 கோடியே 30 ஆயிரம் வசூலானது. ஆனால் செலவு செய்த தொகை ரூ 1 கோடி 79 இலட்சத்து 12 ஆயிரம். இந்த நடப்பு ஆண்டில் கூட ரூ. 1 கோடியே 50 இலட்சம் இந்த ரோடுகள் வசதிக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. தி. அன்பழகன் : தலைவர் அவர்களே, இந்த அம்பலூர்-ஏக்லாஸ்புரம் தரைப்பாலம் விரைவில் ஆரம்பிக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். விரைவில் என்று சொன்னால் எவ்வளவு விரைவில் ஆரம்பிக்கப்படும்? மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, இதன் மதிப்பீடு சுமார் 6 இலட்சம் ரூபாய். உடனடியாக எடுத்துக் கொள்ளப்படும்; இன்னும் 2, 3 மாதங்களில் ஆரம்பிக்கப்படும்.

திரு. எம். அண்ணாமலை : தலைவர் அவர்களே, திருப்பத்தூர் கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு தர்மபுரி மாவட்டத்தில் ஊத்தங்கரையிலிருந்து கரும்பு சப்ளை செய்யப்படுகின்றது. அந்தப் பகுதி விவசாயிகள் சாலைப் போக்குவரத்து இல்லை என்று முறையீடு செய்திருக்கிறார்கள். அது ஏதாகிலும் பரிசீலனை செய்யப்பட்டதா? அல்லது இனிமேலாவது இப்படிப்பட்ட புகார்கள் வந்தால், அந்தச் சாலை போட்டுக் கொடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, சாலை வசதிகள் ஒழுங்காக செய்யவேண்டுமென்ற எண்ணத்தோடுதான் நாம் பாடுபட்டு வருகிறோம். எந்தெந்தப் பகுதிகளில் சாலைகள் ஒழுங்காக இல்லையோ, அங்கே சீர்செய்ய வேண்டும், செம்மைப்படுத்த வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் சொல்லக் கூடியதும் உடனடியாக கவனிக்கப்படும்.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், இப்படி வசூல் செய்யக்கூடிய இந்தப் பணம் முழுக்க முழுக்க சாலைகள் பராமரிப்புக்காக, சாலைகள் போடுவதற்காக பயன்படுத்தப்படுகின்றதா? அல்லது வேறு எவற்றிற்காவது பயன்படுத்தப்படுகின்றதா? அப்படி சாலைகள் பராமரிப்புக்காக பயன்படுத்தப் படுகின்ற நேரத்தில் எந்தெந்த சாலைகள் போடுவது என்பதைப் பற்றி முடிவு கட்டுவது யார் ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : நான் ஏற்கனவே பதிலில் வவரமாக எடுத்துச் சொன்னேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கவில்லை என்று கருதுகிறேன். கரும்பு மேல் வரியாக டன்னுக்கு ஐந்து ரூபாய் வசூலிக்கப்படுகிறது. அதன் மூலம் கிடைக்கக்கூடிய மொத்தத் தொகை சாலை அபிவிருத்தித் திட்டம், ஆராய்ச்சிப் பணிகள், புதிய சர்க்கரை ஆலைகள் துவங்குகிற நேரத்தில் பங்கு மூலதனம் போடுவது என்ற வகையிலே செலவழிக்கப்படுகிறது. பூராப் பணத்தையும் சாலைகளுக்காகவே செலவு செய்ய வேண்டுமென்ற அவசியம் இல்லை. ஆனாலும் எவ்வளவு தொகை வசூலாயிற்றோ அதைக் காட்டிலும் அதிகமாக கடந்த ஆண்டில் சாலை அபிவிருத்திக்குச் செலவழிக்கப் பட்டிருக்கிறது. ரூ. 66,30,000 வசூலானது. ஆனால் செலவு செய்யப்பட்ட தொகை ஒரு கோடி ஒன்பது இலட்சம் ரூபாய். மாண்புமிகு உறுப்பினர் அவாகள் சொலலுவது போன்று சாலைகளுக்கு அதிக முக்கிய'த்துவம் கொடுக்கப்பட்டு வருகிறது.

திரு. எச். ஜி. ஆறுமுகம் : தர்மபுரி மாவட்டம் திருப்பத்தூர் ஷுகர் மில்லுக்கு அறியூர் தொகுதி வழியாக கரும்புகள் சப்ளை செய்யப்படுகின்றன. என்னுடைய தொகுதியில் இருந்து திருப்பத்தூர் ஷுகர் மில்லுக்குக் கரும்பு ஏற்றிச் செல்ல வழித் தடங்கள் சரி இல்லாமல் இருக்கின்றன. அங்கு நடப்பாடு ஆறு ஒன்று இருக்கிறது. அந்த ஆற்றுக்கு பாலம் கட்டித் தந்தால் குன்றத்தூர், சாம்பல்பட்டி வழியாக திருப்பத்தூருக்குப் போக முடியும். திருப்பத்தூருக்கு அதிகமான அளவு கரும்பு கொண்டு செல்ல வேண்டியிருப்பதால் குன்றத்தூர் பாலத்தையும் கட்டித் தர இயலுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : விவர அறிக்கையின் படி ஆறு சாலைகளை அமைக்கின்ற பணியினை இந்த அரசு மேற்கொண்டிருப்பதை எடுத்துச் சொல்லியிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லக்கூடிய அந்தச் சாலைகளைப் பற்றி அவர்கள் விவரமாக எழுதி அனுப்பினால் கண்டிப்பாக பரிசீலிக்கப்படும்.

திரு. ப. சுந்தரம் : கூடப்பட்டு—வெவ்வால் தோப்பு தரைப் பாலம் அமைப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்தத் திட்டம் எப்போது செயல்படுத்தப்படும்? கூடப்பட்டுக்கும் வெவ்வால் தோப்புக்கும் இடையே பாம்பாறு போவதால் மழைக்

1980 பிப்ரவரி 13]

காலங்களில் பாதிப்பு ஏற்படுகிறது. சர்க்கரை ஆலையிலிருந்து இரண்டு சிமெண்ட் பைப்தான் போட்டிருக்கிறார்கள். மழை காலங்களில் அது அடித்துச் செல்லப்பட்டுவிடுகிறது. இப்படிப் பட்ட சிரமங்களைப் போக்க உடனடியாக இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : ஒதுக்கப்பட்ட தொகை மூலமாக பல்வேறு சாலைப் பணிகள் எடுத்துக் கொள்ளப் பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன. சில சமயங்களில் வெள்ளத்தால் பாதிக்கப்படக்கூடிய நேரங்களில் அந்தப் பணி கள் தடைப்பட நேரிடுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லக்கூடிய அந்தத் திட்டங்கள் எல்லாம் உடனடியாக செயல் படுத்துவதற்கான செயற் குறிப்பு இருக்கிறது. இன்னும் இரண்டு மூன்று மாதங்களில் அந்தப் பணிகள் தொடங்க இருக் கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பணகுடியிலுள்ள அரசு மருந்தகம்.

*வினா எண் 139—திரு. யா. சை. மு. யூசப் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் தொகுதி, பணக்குடியிலுள்ள அரசு மருந்தகத்தை மருத்துவமனையாக மாற்றும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் எப்போது இத்திட்டம் நிறைவேற்றப் படும் ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் :

(அ) பணகுடி அரசு மருந்தகத்தை மருத்துவ மனையாக மாற்றும் திட்டம் தற்போது ஏதும் அரசின் ஆய்வில் இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடம் இல்லை.

திரு. யா. சை. மு. யூசுப் : பணகுடியிலுள்ள அரசு மருந்தக மானது தனியாரால் உருவாக்கப்பட்டு, மாவட்ட ஆட்சிக் கழகத் திற்கு அதாவது டிஸ்ட்ரிக் போர்டுக்கு மாற்றப்பட்டு அங்கிருந்து ஊராட்சி ஒன்றியத்திற்கு மாற்றப்பட்டு இப்போது அரசு மருந்தக மாக இயங்கி வருகிறது. டிஸ்ட்ரிக்ட் போர்டுக்குத் தரும் நேரத்தில் ஆறு படுக்கை வசதிகள் கொண்ட கட்டட வசதியுடன் தந்தார்கள். கழுதை தேய்ந்து கட்டெறும்பாவது போல் இப் போது படுக்கை வசதி இல்லாமல் புற நோயாளிகளை மட்டும் கவனிக்கும் மருந்தகமாகச் செயல்பட்டு வருகிறது. 20 ஆண்டு களுக்கு முன்னாலேயே படுக்கை வசதி கொண்டதாக இருந்த அந்த மருந்தகத்தை பத்து படுக்கை வசதிகள் கொண்ட மருத்துவ மனையாகவாவது உருவாக்க அரசு முன்வருமா ?